மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 19 இதழ் / Issue 4 ஏப்ரல் / April 2021



''அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே
உயிர்த்தெழுந்தார்'' [மத்.28:6].

''கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர்... எங்களையும்...எழுப்பி..
தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்'' [2 கொரி.4:14]



**"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப் பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" [ஏசா.54:13].**



## "வாழ்க்கையின் வெற்றி"

ஒருவர் ஒரு நாட்டின் ஜனாதிபதியாகவோ, மிகப்பெரிய செல்வந்தராகவோ, படிப்பாளியாகவோ, எழுத்தாளராக வோ அல்லது வேறு உயர்நிலைகளில் இருப்பதாலோ இல்லை. எந்தப் பெற்றோர்கள் தங்கள் கடமைகளைச் (Parental Duties) சிறப்புறச் செய்ததினால், அவர்களுடைய குழந்தைகளும் பேரக் குழந்தை களும் உயர்வடைந்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களே உண்மையில் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள்.

- தியோடர் ரூஸ்வெல்ட், அமெரிக்க மறைந்த முன்னாள் ஜனாதிபதி

## "சந்ததிகளைக் குறித்து ஆபிரகாமின் கரிசனை"

"கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதி யையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நட வுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்".



**மலர் - 19 ஏப்ரல் - 2021 இதழ் - 4**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. நீதிமான்கள்... கரிசனையுள்ள கர்த்தர் | 6 |
| 3. முடிவுக்கு வரப்போகும்...இராஜ்ஜியங்கள் | 11 |
| 4. நீயும் போய் அப்படியே செய் | 13 |
| 5. விசுவாச வீராங்கனை அன்னாள் | 19 |
| 6. ஜார்ஜ் வாஷிங்டனின்..எச்சரிக்கை.. | 25 |
| 7. கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-17) | 29 |
| 8. செய்திகள் .... | 18, 25 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

Website : www.wordofchrist.org

**வோர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, **"தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**"ஸ்திரீயே, அதோ, உன் மகன்...அதோ, உன் தாய் என்றார். அந்நேர முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்"** (யோவா.19:26,27).

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தலைப்பு வசனத்தின் முதல் பகுதி இயேசு கிறிஸ்து, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த மரணவேளையில் பொழிந்தருளிய ஏழு வார்த்தைகளில் இது மூன்றாவது வார்த்தையாகக் கருதப்படுகிறது. சீடர்களெல்லாம் யூதர்களுக்குப் பயந்து தலைமறைவாகிவிட்ட சூழ்நிலையில் இயேசுவுக்கு அன்பான சீஷனான யோவான் மாத்திரமே அந்த கோர நிகழ்வின் போது கூட்டத்தில் ஒருவனாய் நின்று கொண்டிருந்தான். இயேசுவின் தாயாகிய மரியாளும் அங்கு நின்று கொண்டிருந்தாள். கூப்பிடுகிற அல்லது கேட்கிற தூரத்தில் அவர்கள் நின்று கொண்டிருந்திருக்க வேண்டும்.

இயேசுவின் மரண வேளையில் தனது தாயை அவளது எதிர்கால பராமரிப்புக்கு ஏன் யோவானிடம் ஒப்புவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது? இயேசுவுக்கு பின்பு மரியாள் பெற்ற இயேசுவின் சகோதரர்களும், சகோதரி

களும் இருக்கிறார்களே. அவர்கள் தங்கள் தாயாரைக் கைவிட்டுவிட்டார்களா? அல்ல. அதில் தேவனுடைய திருநோக்கம் பொதிந்திருக்கிறது. அந்த நோக்கத்தை மரண வேளையிலும் வலியுறுத்திச் சொல்லவே அப்படிச் செய்திருக்கிறார். அப்படியானால் அவரது நோக்கம் தான் என்ன?

இயேசு 12 வயதாயிருக்கையில் எருசலேமுக்கு வந்த ஒரு சம்பவத்தை லூக்.2:41-49ல் வாசிக்கிறோம். இயேசு தனது பெற்றோருடன் திரும்பாமல் தேவாலயத்தில் இருந்துவிட்டார். இதை முதலில் தெரியாத அவரது பெற்றோர் நாசரேத்திற்குச் சென்று கொண்டிருந்தவர்கள் அவரைத் தேடி திரும்ப வந்தார்கள். அப்போது தேவாலயத்தில் இயேசு அங்குள்ள போதகர் நடுவில் பேசுவதையும் வாதிடுவதையும் பெற்றோர்கள் கண்டார்கள். ஏன் நாசரேத் திற்குத் திரும்பாமல், ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று கேட்டபோது **"என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?"** (Did you not know that I must be about my Father's business?) என்று பெற்றோர்களிடமுள்ள உலக உறவின் பந்தத்தைத் தாண்டி தேவனோடுள்ள பந்தத்தை முதன்மைப்படுத்துகிறார். இந்த உறவை அந்த வயதில் முற்றுமாக நிராகரித்துவிட்டார் என்று சொல்லமுடியாது. ஆனாலும் அவருடைய பதில் பெற்றோருக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

மத்.12:46-50ல் ஒரு முக்கியமான சம்பவத்தை வாசிக்கிறோம். இயேசு தம்முடைய சீஷர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அப்போது இயேசுவின் தாயாரும், சகோதரரும் அவரைக் காணவந்தார்கள். அதைக் கண்ட ஒருவர் உள்ளே சென்று இயேசுவைக் காண தாயாரும் சகோதரரும் வெளியே நிற்கிறார்கள் என்று சொன்னபோது தமது சீஷர்களைச் சுட்டிகாட்டி **"இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே!...பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்"** (வ.50). இப்போது சந்தேகமின்றி நேரடியாகவே பேசுகிறார். இப்போது உலக உறவின் பந்தத்தை நிராகரித்து இந்த பூலோகத்தில் வாழும் காலத்திலேயே பிதாவின் சித்தம் செய்கிற ஒரு சாராரை சகோதரர், சகோதரி, தாய் என்ற புதிய உறவை அடையாளங்காட்டி உருவாக்குகிறார். இந்த உறவுகள் உடன் பிறந்தவர்கள் அல்ல. பெற்றெடுத்தத் தாயும் அல்ல. ஆனால் பிதாவின் சித்தம் செய்வதின் காரணமாக இவர்கள் தேவனால் பிறந்தவர்கள். இது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு புதிய சமுதாயம்.

இந்த புதிய உறவைக் குறித்து இயேசு கிறிஸ்து தமது மலைப்பிரசங் கத்திலும் வலியுறுத்தி **"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை**

**நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லு கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"** என்று மத்.7:21ல் திரள் கூட்டம் மக்கள் மத்தியில் கூறு கிறார். இங்கே இவ்வாறு உருவாக்கப்படுகிற புதிய சமுதாயமே பரலோகத்தில் பிரவேசிக்கும் என்கிறார். இந்தக் கூட்டத்தாரைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் **நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான் களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள்** (Now, therefore, you are...but fellowcitizen with the saints and members of the household of God) என்று குறிப்பிடுகிறார் (எபே.2:19). இந்தக் கூட்டத்தாரே பரலோக இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் பெற்றவர்கள். இதுதான் இயேசு கிறிஸ்துவின் நோக்கத்திலிருந்த புதிய சமுதாயம். அதை இந்த உலகத்திலேயே ஆயத்தப்படுத்தினார்.

ஆகவே தான் சிலுவையின் மரண வேளையிலும் தன்னுடைய தாயை அந்த புதிய உறவுக்குள் கொண்டுவருகிறார். மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்த தாய். ஆகவே இயேசு மரியாளின் மகன். ஆனால் இப்போது யோவானைச் சுட்டிக்காட்டி "அதோ, உன் மகன்" என்று கூறுகிறார். யோவானைப் பார்த்து "அதோ, உன் தாய்" என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் மரியாள் இதற்கு முன்பாகவே அப்போஸ்தலர்களுடைய ஐக்கியத்திற்குள் வந்துவிட்டாள் (அப்.2:12-14). பிதாவின் சித்தம் செய்ய வந்துவிட்டபடியால் புதிய உறவுக்கு தன்னை தகுதிபடுத்திக் கொண்டாள். அது சிலுவையின் முன்பு உறுதி செய்யப்பட்டதைக் காண்கிறோம். பிதாவின் சித்தம் செய்யாத வர்களை இயேசு உங்களை அறியேன் என்பார் (மத்.7:23).

பிதாவின் சித்தம் செய்யும் புதிய உறவின் பந்தத்தால் தேவனுடைய வீட்டார் என்ற சிலாக்கியத்தைப் பெற்று பரலோக இரஜ்ஜியத்தில் பிரவேசிக்கப் போகிறோமா அல்லது "உங்களை அறியேன்" என்று சொல்லி நிராகரிக்கிற இடத்தை எட்டப்போகிறோமா? சிந்திப்போம். பிதாவின் சித்தம் செய்யத் தீர்மானிப்போம். பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இப்பூவுலகில் வாழுங்காலத்திலேயே அடைந்து கொள்ளும் அனுபவத்தை பெற்றுக்கொள்வோம். – **இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை**

---

**பிரசங்கம்பண்ணுகிற நான்தானே...**

**"பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பாதவர்களின் அழிவே பயங்கரமாக இருக்குமானால் மனந்திரும்பாமல் பிரசங்கிக்கிறவர் களின் அழிவு எவ்வளவு பயங்கரமாயிருக்கும்" – CH.Spurgeon**

**"மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"** – 1 கொரி.9:27

# நீதிமான்கள் மேல் கரிசனையுள்ள கர்த்தர்

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது..." (சங்.34:15)**

**- டாக்டர். பால் N, 98847 39635**

பேரரசன் தாவீது, தேவன் தன்னை நீதிமானாய் கண்டு, அவருடைய கண்கள் தன் மீது நோக்கமாயிருந்து, எப்படி எதிரிகளின் கைகளிலிருந்து தம்மை விடுவித்தார் என்பதை சங்.34-ல் எழுதியிருக்கிறார். இதே வார்த்தையை தேவன் இன்றைக்கு தீர்க்கதரிசன வார்த்தையாக நமக்குத் தருகிறார். "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" என்று வேதம் கூறுகிறது. எதற்காக நம்மீது நோக்கமாயிருக்கிறது? நம்மை ஆசீர்வதிப்பதற்காகவும், நம்மை பாதுகாப்பதற்காகவுமே.

**வேதநாயகம் சாஸ்திரியார்**

மறைந்த திரு.வேதநாயகம் சாஸ்திரியார் (1774 - 1864) என்கிற தேவனுடைய மனிதர், கர்த்தரால் வழிநடத்தப்பட்டு, முழுநேர ஊழியம் செய்து, அநேக பாடல்களையும், கவிதைகளையும், கதைகளையும் எழுதி, திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் சிறப்பை உண்டு பண்ணினவர். அவருடைய தந்தை திரு.அருணாச்சலம்பிள்ளை என்பவர் முதன்முறையாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவராக மாறினார். அந்நாட்களில் பிறமதத்தினர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது என்பது மிகவும் அரிதான ஒரு காரியம். அப்படிப்பட்ட காலத்திலேயே அவர் கிறிஸ்துவைப் பின்பற்றினார். அவருடைய முதல் மகனாகிய வேதநாயகம் படிப்பறிவு இல்லாதவராயும், படிப்பில் நாட்டமில்லாதவராயும் இருந்தார். அழுது ஜெபிக்கும் தந்தையின் கூக்குரலைக் கேட்டு, அவர் மேற்கொண்டு படிப்பதற்கு சம்மதித்தார். கர்த்தருடைய அருளினால் நன்றாக படித்து, மிகச்சிறந்த கல்வியாளராக மாறினார். பல மொழிகளில் அவர் தேர்ச்சி பெற்று, அநேக கவிதைகளையும், பாடல்களையும் எழுதினார். 130-க்கும் அதிகமான நூல்களை இயற்றியதோடு, 500-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ பாடல்களையும் எழுதினார். அந்நாட்களில் ஆங்கிலப் பாடல்களை தமிழில் மொழிபெயர்த்து பாடிக் கொண்டிருந்த நிலையில், இவர் தன்னுடைய தாய்மொழியான தமிழில் இயற்றிய பாடல்கள், இன்றைக்கும் கீர்த்தனைகளாக திருச்சபைகளிலே பாடப்பட்டு வருகிறது.

அவருடைய வாழ்க்கையில் ஆச்சரியப்படத்தக்க ஒரு சம்பவம் நடந்தது. 1849-ம் வருடம், அவர் தன்னுடைய மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் அனைவரோடும் இரவு

சாப்பாட்டிற்கு வந்தபொழுது, அவருடைய மகள் ஞானதீபம் என்பவர், "அப்பா, இன்று இரவு சாப்பிடுவதற்கு சாப்பாடு இல்லை; அதற்கான பொருட்களும் பணமும் நம்மிடம் இல்லை; ஆகவே, இன்று இரவு நாம் உபவாசித்து ஜெபிப்போம்" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் வேதநாயகம் சாஸ்திரியார் மிகவும் வருத்தமடைந்து, "நான் இயேசுவிடம் பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஜெபிக்கும்படி சென்றார். அவர் உள்ளத்தின் ஆழத்தில் ஜெபித்து, தன்னுடைய விருப்பத்தை கவிதையாய் ஆண்டவருடைய சமுகத்தில் படைத்தார். அந்தக் கவிதையை இவ்வாறு பாடினார்.

**"தேவா, இரக்கம் இல்லையோ - இயேசு / தேவா இரக்கம் இல்லையோ / எல்லாம் அறிந்த பொருளே / எங்கள் இல்லாமை நீக்கும் அருளே - கொடும் / பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக் / கொல்லாதருள் புரியும் நல்லாயன் யேசுநாதா"**

என்ற கவிதையை அவர் பாடலாக பாடினார். அவர் பாடி முடிந்தவுடன், அவருடைய வீட்டின் கதவு தட்டப்பட்டது. வீட்டின் கதவை திறந்தவுடன் அங்கு நின்றவர்கள், "இது வேதநாயகம் சாஸ்திரியார் வீடுதானா?" என்று கேட்டார்கள். "ஆமாம்" என்றனர். அப்பொழுது அவர்கள், "பக்கத்து ஊரிலுள்ள ஒரு செல்வந்தர், தம்முடைய ஒரே மகளுக்கு திருமணம் நடத்தினார். திருமணத்திற்கு அழைக்கப்பட்ட அநேகர் வரவில்லை. ஆகவே, பெருமளவு உணவு மீதியாகி விட்டது. இரண்டு மாட்டு வண்டிகள் நிறைய உணவு பொருட்களை உங்களுக்கு கொடுத்து விட்டு வரும்படி அந்த செல்வந்தர் சொன்னார்" என்றார்கள். இரண்டு மாட்டு வண்டிகளிலும் கல்யாண சாப்பாடு, தாராளமாக இருந்தது. அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

ஆம், எனக்கு அருமையானவர்களே, நீதிமான்கள் என்பவர்கள் யார்? தேவன்மேல் முழு விசுவாசம் வைத்தவர்கள்தான் நீதிமான்கள். ஆதி.15:6; ரோமர் 4:3; கலா.3:6 ஒரே காரியத்தை சொல்லுகிறது. **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.** ஆகவேதான், **"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"** என்று கூறுகிறது (கலா.3:11) உங்கள் விசுவாசம் தேவன்மேல் இருக்கும்பொழுது, நீங்கள் கர்த்தருக்கு முன்பாக நீதிமானாய் விளங்குவீர்கள். உங்கள் விசுவாசமே உங்களை நீதிமான்களாய் மாற்றுகிறது. நீங்கள் நீதிமான்களாய் மாறும்பொழுது, கர்த்தருடைய கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருந்து உங்களை ஆசீர்வதிக்கும். அவர் உங்கள் தேவைகளை அறிந்து, அதற்கான ஆசீர்வாதங்களை முன்குறித்து வைக்

கிறார். ஒவ்வொரு காலகட்டத்திலும் உங்களை ஆசீர்வதிக்கும்படி அவர் மிக கவனமாக செயல்படுவார்.

## மூன்று இளைஞர்கள்

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று யூத வாலிபர்களும் பாபிலோனில் சிறைப்பிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டார்கள். நேபுகாத்நேச்சார் என்ற பேரரசன் ஆளுகை செய்த அந்த காலம் (கி.மு 601 முதல் 562). அவன் எருச லேமுக்கு விரோதமாய் சென்று, அங்குள்ள தேவாலயத்தையும் மற்றும் கட்டிடங்களையும் இடித்து, அங்குள்ள ராஜகுமாரர்களையும், பிரபுக்களின் குமாரர்களையும் சிறைப்பிடித்து தன்னுடைய நாட் டிற்குக் கொண்டு சென்றான். தங்க ளுடைய கண்களுக்கு முன்பதாக, பெற்றோரும், சகோதரர்களும் கொலை செய்யப்பட்டு, தங்களுடைய ராஜ்யம் இடிக்கப்பட்டபொழுது, அவர்கள் அடிமைகளாக கொண்டு போகப்பட்ட நேரத்தில் அவர் களுடைய மனநிலை எப்படி இருந் திருக்கும்? அப்படிப்பட்ட சூழ்நிலை யின் பின்னணியில் அவர்களால் படிக்க முடியுமா? ஆனாலும் அவர்கள் படிக்க வைக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் பட்ட பாடங்கள் அரிதானவைகள். நேபுகாத்நேச்சாரின் அரசாங்கத்தின் கீழ் 120 ராஜ்யங்கள் இருந்தது என்று சரித்திரம் கூறுகிறது. அவைகளுக் குரிய மொழிகளையும், கலாச்சாரங் களையும், வானசாஸ்திரங்களையும் நிர்வாக ரீதியான காரியங்களையும் படிக்கவேண்டும். ஆனாலும் இறுதி யிலே, அவர்கள் தங்களோடு படித்த கல்தேய புத்திரர்களைவிட 10மடங்கு மேம்பட்டிருந்தார்கள்; புத்திக்கூர்மை யுள்ளவர்களாக இருந்தார்கள்.

ஒரு சமயம், ராஜா ஒரு பொற் சிலையை உண்டுபண்ணி அதை யாவரும் பணிந்து கொள்ள வேண்டும் என்ற ஆணை பிறந்தது. ஆனால், இந்த மூன்று இளைஞர் களும் அந்த சிலையை வணங்க வில்லை என்று பாபிலோன் ராஜா கேள்விப்பட்டபொழுது, உங்களுக்கு மீண்டும் ஒரு தருணத்தைத் தருகி றேன். நீங்கள் பணிந்துகொள்ளா திருந்தால் அக்கினிச்சூளையில் போடப்படுவீர்கள். ‘‘உங்களை என் கைக்குத் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?’’ என்று சவால்விட்டான். ஆனால் அவர்களோ, **எங்கள் தேவ னாகிய கர்த்தர் எங்களை உம் முடைய கைக்கும், அக்கினி சூளைக்கும் விடுவிக்க அவர் வல்ல மையுள்ளவராயிருக்கிறார். அவர் விடுவியாமற்போனாலும் நீர் உண்டுபண்ணின பொற்சிலைக்கு ஆராதனை செய்து அதை நாங்கள் பணிந்துகொள்ள மாட்டோம்** (தானி.3:17,18) என்று தைரியமாக சொன்னார்கள். அந்த தைரியம் அவர் களுக்கு எப்படி வந்தது? தேவன் எல்லாவற்றையும் செய்வார். அவர் விடுவியாமற்போனாலும்

அவரே கர்த்தர் என்று விசுவாசித்தார்கள். காரணம், அவர்மேல் அன்பு கூருகிறவர்களுக்கு சகலத்தையும் அவர் நன்மைக்கேதுவாகவே செய்வார் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் (ரோம.8:28). ஒரு வேளை அந்த நேரத்தில் தேவன் அவர்களை விடுவிக்காமற் போனாலும், அதையும் நன்மையாக மாற்றுவார் என்ற விசுவாசம் இருந்தது. விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி.11:1). **அதுதான் விசுவாசத்தின் இலக்கணம்.** ‘‘தேவன் ஒருவர் உண்டு. அவர் நம்மை நடத்துகிறார். அவர் நம்மை விடுவிக்கிறவர்’’ என்று விசுவாசித்தார்கள். இந்த விசுவாசம் அவர்களை நீதிமானாய் மாற்றியது. ஆகவே தான் கர்த்தருடைய கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருந்தது. நான்காவது மனிதனாக இயேசு கிறிஸ்து தேவதூதரைப்போல அவர்களுக்குள்ளே அக்கினி சூளையிலே உலாவினார். அதிலிருந்து அவர்களை விடுவித்தார்.

## யோசேப்பு

யோசேப்பைக் குறித்து வேதத்தில் பார்க்கும்பொழுது, அவன் தன் சகோதரர்களால் எகிப்தி போத்திபாரின் வீட்டில் அவன் வேலை செய்தான்; பொய்யான குற்றச்சாட்டின் காரணமாகச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். இந்த இரண்டு இடங்களிலேயும் கர்த்தர் யோசேப்போடுகூட இருந்தார் (ஆதி.39:2,21). கர்த்தருடைய கண்கள் அவன்மேல் நோக்கமாயிருந்தது. காரணம், அவன் தேவனை விசுவாசித்தான். அடிமையாய் விற்கப்பட்டபொழுதும் அவன் ஆண்டவருக்கு பயந்து நடந்தான். தன் எஜமானி தன்னுடைய ஆசைக்கு இணங்க அழைத்தபொழுது, ‘‘இத்தனை பெரிய பொல்லாப்புக்கு நான் உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?’’ என்று கேட்டான். நான் ஏன் இங்கு அடிமையாய் வாழ்கிறேன் என்று அவன் தேவனை நோக்கி கேள்விக் கேட்கவில்லை. மாறாக, அந்த சூழ்நிலையிலும், தேவன் பேரில் அவன் விசுவாசம் வைத்து, அவருக்குப் பயந்து வாழ்ந்தான். ஆகவேதான், கர்த்தருடைய கண்கள் அவன்மேல் நோக்கமாயிருந்தது.

எனவே பிரியமானவர்களே, ஒருவேளை யோசேப்புக்கு வந்தது போல, சூழ்நிலைகள் உங்களை தேவனுக்கு விரோதமாக நடத்துகிறதா? இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்க உங்களை வற்புறுத்துகிறதா? இந்த உலகத்தின் பாவத்திற்கு இணங்க சூழ்நிலை கைதிகளாக இருக்கிறீர்களா? மோசம்போகாதிருங்கள், யோசேப்பைப் போல, கர்த்தர் மீது விசுவாசம் வைத்து, அவருக்கு பயந்து நடவுங்கள். பாவத்திற்கு எதிர்த்து, தேவனை சார்ந்து கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை உயர்த்தும்படி, அவருடைய கண்கள் உங்களையே நோக்கிக் கொண்டிருக்கும்.

உங்கள் பேரில் கர்த்தருடைய கண்கள் நோக்கமாயிருக்கிறது. நீங்கள் இந்த உலகத்திற்கு ஒத்துப் போகிறவர்களாயிருக்கிறீர்களா அல்லது பாவத்தை எதிர்த்து தேவனுக்காக நிற்பேன் என்ற தீர்மானத்தோடு நிற்கிறீர்களா என்று கர்த்தருடைய கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. யோசேப்பு பாலியல் இச்சைகளுக்கு விலகி ஓடினான். அவன் தான் அணிந்திருந்த மேலாடையை விட்டு விட்டு ஓடினான். யோசேப்பு பொய்யான குற்றச்சாட்டில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். கர்த்தர் அவனோடுகூட இருந்தபடியினால், அவனுக்கு 30 வயது ஆகும் பொழுது, சிறைச்சாலையிலிருந்து அழைக்கப்பட்டு எகிப்து தேசத்தின் ஆளுநராக கர்த்தர் அவனை உயர்த்தினார்.

எனக்குப் பிரியமானவர்களே, கர்த்தருடைய கண்கள் உங்களை ஆசீர்வதிக்கும்படி, உங்களை உயர்த்தும்படி உங்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. இது, கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துகிற காலம். நீங்கள் இந்த உலகத்தின் பாவத்திற்கு இணங்கிப் போகாதிருங்கள். சூழ்நிலைகளின் ஓட்டத்திற்கு இசைந்து ஓடி, அதிலே மயங்கி உங்களை விற்றுப் போடாதிருங்கள். தேவன் உங்களை உயர்த்தும் இந்த காலத்தில் தாழ்ந்து போகாதிருங்கள். அவர் நிச்சயம் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார். ஏனெனில், கர்த்தருடைய கண்கள் உங்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. ●

- 31ம் பக்கத் தொடர்ச்சி....

இயேசுவின் வழியும், சத்தியமும் ஜீவனும் தான் நம்மைப் பிதாவினிடத்தில் கொண்டு போய் சேர்க்கும். நம்முடைய சுயநீதிகள் அவருடைய பார்வையில் அழுக்கான கந்தை என்று வேதம் சொல்லுகிறது. இரண்டவாதாக, பரிசுத்த ஆவியினால் இயேசு அருளும் வெளிப்படுத்தல்களை நாம் நிராகரிப்போமானால் அல்லது பொதுவாக ஒரு சாதாரணமான ஒரு சிந்தனையாளராக இருப்போமானால் நம்முடைய சிந்தனைகள் சிதறடிக்கும் விளைவுகளைத்தான் உண்டாக்கும். பரிசுத்த ஆவியினால் பெற்றுக் கொள்ளும் வெளிப்படுத்தலை அசட்டை செய்வோமானால் அது நம்மைத் தவறான இடத்திற்கு வழிநடத்தும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். **ஒருபோதும் நம்முடைய அறிவைக் கொண்டு பரிசுத்தஆவியின் செயல்பாட்டைக் கேள்வி கேட்கக்கூடாது.**

கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணத்தில் நீங்கள் சேர்ந்து பயணித்த தில் நன்றி. இயேசுகிறிஸ்துவை மாத்திரம் நோக்கி பொறுமையோடு ஓடி இந்த பந்தயத்தில் கிறிஸ்தியான் அதன் பிரதிபலனைப் பெற்றுக் கொண்டது போல நாமும் பெற்றுக்கொள்வோம். இயேசுகிறிஸ்துவில் நமது அன்பை ஊன்றி மோட்சப் பட்டணத்தைச் சென்றடைவதே நமது இருதயத்தின் வாஞ்சையாகவும் இலக்குமாக இருக்கட்டும். ஆண்டவருடைய கிருபை நம்மோடிருப்பதாக. **- முற்றும்**

**- சகோதரி. லாரா டெலனோ, email Id: lauradelano@yahoo.com** ●

**மூலமொழிச் சொல்றிவோம்**

# முடிவுக்கு வரப்போகும் உலக இராஜ்ஜியங்கள்

## லிக்மோ (Likmao)

**"இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப் போவான்; (ஆனால்) இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.21:44)**

பழைய ஏற்பாட்டில் ஆண்டவர், கன்மலைக்கும், பாறைக்கும் (Rock or Stone) ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறார். மேலும் இந்தப்பாறை (Stone) மேசியாவுக்கான பட்டப்பெயராகவும் (Messianic Title) சொல்லப் பட்டிருக்கிறது. அவரை நிராகரித்த இஸ்ரவேலர்களுக்கு அவர் "தடுக்கலின் கல்" (A Stone of Stumbling) என்றும், "இடறுதலின் கன்மலை" (A Rock of offence) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (ஏசா.8:14).

தலைப்பு வசனம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்துப் பேசும்போது இறுதியாகச் சொன்ன வசனமாகும். அதின் முதல்பகுதி "இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் **நொறுங்கிப் போவான்**" என்று சொல்லியுள்ளார். இரண்டாம் பகுதி "ஆனால்" என்ற இணைச்சொல்லை பயன்படுத்தி (ஆங்கில வேதாகமத்தின்படி) இது எவன்மேல் விழுமோ அவனை **நசுக்கிப்போடும்**" என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே இந்த வசனத்தின் மூலமாக இரண்டு செய்திகளைச் சொல்லியிருக்கிறார் என்பதை யூகிக்க முடிகிறது. இரண்டு பகுதியிலும் இயேசுகிறிஸ்து தம்மைக் கல்லுக்கு ஒப்பிட்டுச் சொல்லியுள்ளார். முதற்பகுதி (Whoever falls on this stone will be broken)-(NKJV) "இந்தக் கல்லின் மேல் அல்லது என்மேல் விழுகிறவனின் இருதயம் நொறுங்குண்டு என் கிருபையில் சார்ந்து கொள்ளுகிறவன் தன்னைச் சீர்படுத்திக் கொள்ளுவான்" என்று பொருள்படும்.

உதாரணமாக, தாவீது பாவஞ் செய்தபோது ஆண்டவர் அவனுக்குத் தண்டனை கொடுத்தார். தண்டனையின் வேறுபட்டத் தன்மைகளை சொல்லி ஏதேனும் ஒன்றைத் தெரிந்து கொள்ளும்படி மூன்றுவகையானத் தண்டனையைக் கொடுத்தார். ஒன்று, தேசத்தில் ஏழுவருட பஞ்சம். இரண்டு, மூன்று மாதங்கள் சத்துரு பின் தொடர ஜீவன் தப்ப ஓடுவது. மூன்று, மூன்றுநாள் கொள்ளை நோய். தாவீதுக்கு எதைத் தெரிந்து கொள்வது என்று திகைத்து "கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்" என்று அங்கலாய்க்கிறான். அப்பொழுது தாவீது **"நாம் கர்த்தருடைய கரத்தில் விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகாபெரியது"** என்றான். (Let us fall into the hands of the lord for his mercies are great)

“இதோ, நான்தான் பாவஞ்செய்தேன், நான்தான் அக்கிரமம் பண்ணினேன், இந்த ஆடுகள் என்ன செய்தது? என்று தன்னை உணர்ந்தான். ஆண்டவர் தண்டனையாகக் கொடுத்த கொள்ளைநோய்க்கு மனஸ்தாபப்பட்டு சங்கார தூதனை நோக்கி “போதும் நிறுத்து” என்றார். தண்டனையை அனுபவித்த தாவீது ஆண்டவருடைய கரத்தில் விழும் போது அவனது இருதயத்தை நொறுக்கி சீர்படுத்திய சம்பவத்தை வாசிக்கிறோம் (2சாமு.24:1-19).

ஆனால் இரண்டாவது பகுதி அது ஆண்டவரின் நியாயத்தீர்ப்பின் பகுதி. “(ஆனால்) இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்” (But on whomsoever it shall fall it will grind him to powder). **“நசுக்கிப்போடும்”** என்ற சொல்லின் கிரேக்க மூலமொழிதான் “லிக்மோ” (Likmao). இந்த சொல்லுக்கு நசுக்கி தூள்தூளாக்கி பதரைப் போல (chaff) சிதறடிக்கப்படுகிற நிலையைக் குறிப்பிடுவதாகும். கல்குவாரியில் கடுமையான கற்கள் கிரஷரில் (Crusher) போட்டு அரைக்கப்படும்போது அது தூளாக்கப்பட்டு காற்றில் பறப்பதை நாம் கண்டிருக்கிறோமல்லவா. பெருமழை காரணமாக மலைப்பிரதேசங்களில் பெரும் பாறை பெயர்ந்து உருண்டு வந்து கிராமத்தையே அழித்த சம்பவங்களை நாம் கண்டிருக்கிறோம் அல்லவா.

வேதத்தில் அப்படி ஒரு கல் பெயர்ந்து வந்து இராஜ்ஜியங்களின் ஆளுகையை அழித்து, சிதறடித்த ஒரு சம்பவத்தைக் காண்கிறோம். நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் ஒரு பெரிய சிலையைக் கண்டான். அதன் அர்த்தத்தை தானியேல் வெளிப்படுத்திக் கொடுக்கும்போது இனி ஸ்தாபிக்கப்படப்போகிற அழிவில்லா இராஜ்ஜியத்தைக் குறித்து சொல்லுகிறான். **“ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த இராஜ்ஜியங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்”** என்று காண்கிறோம் (தானி.2:44). இங்கே உலக ராஜ்ஜியங்களையெல்லாம் **நொறுக்கி, நிர்மூலமாக்கப்படும்** (Break in Pieces) என்ற எபிரேய சொல்லும் இந்தக் கல் “எவன் மேல் விழுமோ அவனை **நசுக்கிப் போடும்”** என்ற கிரேக்கச் சொல்லும் ஒரே பொருள்பட உள்ள சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தச் சிலையின் கால் பாதமும் விரல்களும் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாய் இருந்தது. இரும்பும் களிமண்ணும் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளாதது போலவே கடைசி காலத்தில் தோன்றும் இராஜ்ஜியங்களை ஆளுகிறவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.

**- 28ஆம் பக்கம் பார்க்க...**

# “நீயும் போய் அப்படியே செய்” (லூக்.10:37)

லூக்கா 10:25-37ல் காணப்படுகிற நல்ல சமாரியன் என்ற உவமையில் நமது ஆண்டவர் தம் நீதிநெறியை (Morals) வெளிப்படுத்தியிருக்கிறார். “எனக்குப் பிறன் யார்?” என்று நியாயசாஸ்திரி எழுப்பிய கேள்விக்குப் பதிலுரையாகத்தான் இந்த உவமையை இயேசு சொல்லியுள்ளார். பிறன் என்கிறவனிடத்தில் காணப்பட வேண்டிய பண்புகளை, சுட்டிக்காட்டு கிறதைக் காண்கிறோம். **“மற்றவர்களின் தேவையில் அல்லது அவர்களின் இக்கட்டான சூழ்நிலையில், உதவுகிறவனே பிறன் என்பதை இந்த உவமை தெளிவாக்குகிறது.** இந்த உவமையையும், இதில் வரும் கதாபாத்திரங்களையும் சரியாய் புரிந்துகொள்ள, இந்த உவமையில் பின்புலம் துணைபுரிகிறது.

1. எருசலேம் - எரிகோ சாலையின் அமைப்பு 2. யூதர்களுக்கும் - சமாரியருக்கும் இடையே இருந்த உறவு

1. எரிகோ செல்லும் சாலை: திருடர்களும், கொள்ளைக்காரர்களும் நிறைந்த ஓர் பாதை. மதகுருக்கள், ஆலயப்பணியாளாகள் அடிக்கடி செல்லும் வழியாக இருந்தாலும், மதத்திற்கு கொடுத்த முக்கியத்துவம் சாலை பாரமரிப்புக்கோ, திருடர் பயத்தைப் போக்குவதற்கோ, முயலவில்லை. இது, இன்றும் நடக்கும் நிகழ்வுதானே. இந்த சாலைக்கு “இரத்த சாலை” என்ற பெயரும் உண்டு.

2. யூதர் - சமாரியர் உறவு: யூதர் சமாரியரை, எட்டியாய் வெறுத்தார்கள். சமாரியரும் அவ்வப்போது யூத ஆலயங்களை தகர்க்க முயல்வதுண்டு. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், யூதர்கள் சமாரியரை, இழிவாக நடத்தினார்கள். சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே, சமாரியர், நடத்தப்பட்டனர்.

குறிப்பு: இந்த உவமையில், குற்றுயிராய், கிடந்தவனுக்கு உதவினவனைத்தவிர, மற்ற இருவரும் யூதர்கள். யூதர்கள் யாரை இழிவாய் நடத்தினார்களோ அவனே தன்னை வெறுத்த இனத்தவனாகிய குற்றுயிராய் கிடந்தவனுக்கு உதவி செய்தான் என்று கூறி நமது ஆண்டவர் யூதர்களை வெட்கத்துக்குள்ளாக்கு கிறதைப் பார்க்கிறோம்.

இந்த உவமையில் இடம் பெறும் கதாபாத்திரங்களும் நாம் பெறும் பாடமும்

### 1. குற்றுயிராய்க் கிடந்த பயணி:

இந்த சாலையில் செல்லுகிறவர்கள், குறிப்பாக, உடமைகளுடன் செல்லுகிறவர்கள், ஒரு கூட்டமாக செல்லுவது தான் வழக்கம். தனியாகச் செல்வது, ஆபத்தையே காட்டும். இவன் நிலைக்கு காரணம் இவனே. **பாடம்:** நாமும் கூட சில வேளைகளில் தவறான முடிவுகள் எடுத்து தேவையற்ற பாதிப்புக்கு உள்ளாகுகிறோம்.

இவனுடைய செயல், நமக்கு பாடமாக அமையட்டும்.

**சாஸ்திரி:** இவன் நினைவில் இருந்ததெல்லாம் எண்.19:11ஆம் வசனம் தான். “செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழு நாள் தீட்டுப்பட்டிருப்பான்”. ஆகையால் தன்னை தீட்டுப்படாமல் காத்துக் கொள்ள வேண்டும். தீட்டுப்பட்டால், ஆலயப்பணியை இழக்க நேரிடும். அவன் மரித்தானா உயிரோடிருக்கிறானா என்று பார்க்காமலே மரித்திருந்தால், அவனைத் தொட்டு விட்டால்? என்ற கேள்விக்குள்ளானவனாய் அவனுக்கு உதவுவதை தவிர்த்தான். தன்னலம் பேணுகிறவனாய் உள் நோக்குகொண்டவனாய் இருந்தான். **பாடம்:** இதுவரை நம் வாழ்வில் நான், எனது, என் வசதி, என் பாதுகாப்பு, என் பதவி இவைகளே பிரதானம் என்றிருந்து, பிறரின் துயரில் பங்கு கொள்ளாதிருந்திருப்போமானால் இனியாவது பிறர் துயரில் பங்கு கொள்ள அழைக்கப்படுகிறோம்.

**லேவியன்:** இவன் ஒரு வேளை உதவி செய்ய நினைத்திருப்பான். ஆனால் அதற்குத் தடையாய் இருந்தது அவனது சந்தேகம். அது என்ன? சில வேளைகளில் திருடர்கள் தங்களில் ஒருவன் பாதிக்கப்பட்டவனாக சாலையில் கிடத்தி உதவி செய்ய வருபவனை சுற்றிவளைத்து வழிப்பறி செய்வதுண்டு. ஒருவேளை இங்கு கிடப்பவனும் அப்படிப்பட்டவனாய் இருந்தால்? நான் ஏன் இதற்கு உள்ளாக வேண்டும். என் பாதுகாப்பு எனக்கு முக்கியம். இந்த சூழ்நிலையில் அகப்படுவதைவிட கடந்து செல்வதே, புத்திசாலித்தனம் என்று இவனும் உதவுவதை தவிர்த்தான். **பாடம்**: தான் மறந்து கூட எதிலும் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. உதவி செய்யப் போனால், உபத்திரவம் தான் வரும். இந்த உலகில் அதிகம் பேர் ஏமாற்றுக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று அநேக வேளைகளில் நாமும் கூட இப்படித்தான் சொல்லுகிறோம். சாக்குப்போக்கு சொல்லி, சக மனிதருக்கு உதவ மறுத்தால், தான் ஒரு சிரமத்தில் அகப்படும் போது மற்றவர்களும் நம்மை இப்படித்தான் நடத்துவார்கள் என உணர வேண்டும். அல்பெர்ட் ஸ்விட்சர் (Albert sweitzer) என்பவர் **“பிறருக்காக வாழுவது கடினமாயிருக்கலாம். ஆனால் அப்படி பிறர் துயரில் பங்கு கொள்ளும்போது நம் வாழ்வு செழுமையானதாக மகிழ்ச்சி நிறைந்ததாக மாறுகிறது”** என்று கூறியுள்ளார்.

**சமாரியன்:** இவன் கடவுள் நம்பிக்கை அற்றவன் என்று கருதப்பட்டவன். இவன் வேதம் கற்றவனோ, நீதிநெறிகளைக் கற்றவனோ அல்ல. ஆனால் இவன் ஒரு நல்ல மனிதன். மனிதாபிமானம் நிறைந்தவன். பாதிக்கப்பட்டவன் போல இவன் யூதன் அல்ல. ஆனாலும் அவனிடத்தில் கரிசனை காட்டுகிறவனாய் அன்பு செலுத்தி, இரக்கமும் காட்டுகிறான். அவன் நலம் பெறுவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கிறான்.

**பாடம்:** பல ஆண்டுகள் ஆசாரியனாயும் லேவியனாயிருந்தும் ஆற்ற வேண்டிய அடிப்படை சேவை செய்ய தவறியவர்களைவிட ஆண்டவரையே அறியாத சமாரியன் எத்துனை மேன்மையானவன் என்பதை ஆண்டவர் சுட்டிக் காட்டுகிறதைக் காண்கிறோம். இப்படி செய்வதே ஆண்டவருக்குப் பிரியம். நாமும் நமது அன்றாட வாழ்வில் சமாரியன் செய்ததை பிரதிபலிக்கும்படி நினைபூட்டப்படுகிறோம்.

### 3 பாத்திரங்கள் - 3 கப்பல்கள் - ஓர் ஒப்புமை

இந்த நல்ல சமாரியன் உவமையில் வரும் 3 நபர்கள் டைட்டானிக் (Titanic) என்ற சொகுசு கப்பல் மூழ்கிய போது, அதை சுற்றியிருந்த 3 கப்பல்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் எனலாம். **ஓர் பார்வை:** மூழ்கவே மூழ்காது என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட டைட்டானிக் கப்பல் ஏப்ரல் 15, 1912ல் மூழ்கியது. இதனை மற்ற 3 கப்பல்கள் கவனித்தன.

முதல் கப்பல், ‘‘சாம்சன்’’ டைட்டானிக் கப்பலில் பறக்கும் துயரச் கொடியை பைனாகுலர் பார்க்கும் தூரத்தில் 7 மைல் தொலைவில் இருந்தது. ஆனாலும் அக்கப்பல் தலைவன் உதவி செய்ய முன்வரவில்லை. ஏன்? அது ஒரு குற்றச் செயலில் ஈடு பட்டுக் கொண்டிருந்தது. ‘சீல்’ என்ற மீன் இனத்தைப் பிடிக்கக் கூடாது என்ற தடைச் சட்டமிருந்தது (Prohibited Species). அவர்கள் பிடித்த சீல் மீன்கள் கப்பலில் ஏராளமிருந்தன. மேலும் மீன்பிடிப்பதில் மும்முரமாயிருந்தனர். ஆகவே உதவிக்கு சென்றால் தங்கள் குற்றம் வெளியாகிவிடும் என்ற பயத்தாலும், மீன் பிடித்து தங்கள் வருமானத்தைக் பெருக்கி கொள்ளும் சுய இலாபத்திலேயே கண்ணோட்டமாக இருந்தாலும் உதவி செய்யும் நல்லுணர்வு அற்றவர்களானார்கள்.

இரண்டாவது கப்பல் ‘‘கலிபோர்னியா’’. இந்த கப்பல் 14 மைல் தொலைவிலிருந்தது. டைட்டானிக் கப்பலின் துயரக்கொடியைக் காணும் தூரத்தில்தானிருந்தது. கப்பல் தலைவனுக்கு உதவிக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணமிருந்தது. ஆனால் அங்குமிங்குமாகச் சுற்றுப்புறத்தைப் பார்த்தான். டைட்டானிக்கை அணுகும் பாதையில் பனிக்கட்டிகள் மிதப்பதைக் கண்டான். அவர்களுக்கு உதவி செய்யப்போய் நான் ஆபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றும் வழியில் பனிக்கட்டிகள் கிடக்கின்றன என்ற சாக்குப்போக்கை வைத்துக் கொண்டு, தன் சுயபாதுகாப்பை முதன்மைப்படுத்திக் கொண்டு உதவிக் கரம் நீட்ட மறுத்துவிட்டான். உதவி செய்யவேண்டுமென்ற இரக்க சிந்தை இருந்தும் சுயபாதுகாப்பு மேலோங்கிய படியால் அதை நியாயப்படுத்தி இரக்கத்தை உள்ளடக்கிக் (Suppressed) கொண்டான்.

மூன்றாவது கப்பல் ‘‘கப்பார்த்தியா’’. இது 58 மைல் தொலைவிலிருந்தது.

இந்தக் கப்பல் தலைவன் ஆர்தர் ஹென்ரி அபயக்குரலைக் கேட்டான் (SOS). இரவு 2 மணி. பனிமூட்டமான சூழ்நிலை. தூரத்துப்பார்வை குறைச் சலாகவே இருந்தது. தூரத்தையும் சுற்றுச் சூழலையும் பார்க்கிறான். தனது இயலாமையும் உணருகிறான். அக்கப்பலில் உள்ளோரை காப்பாற்று வது சாத்தியமாகுமா என்பதை சிந்திக் கிறான். ஆனாலும் அமிழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மீதான இரக்கம் மேலோங்குகிறது. உடனே "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்" என்று முழங்காற்படி யிட்டான். இரக்கம் மேற்கொண்டது. எதிர்திசையில் சென்று கொண்டிருந்த தனது கப்பலைத் திருப்பினான். கப்பல் வேகத்தைக் கூட்டினான். அதற்குள் ளாகவே பெரும்பான்மையான பயணிகளுக்கு கடலே கல்லறை யாயிற்று. ஆனாலும் தன்னுடைய கப்பல் பணியாளர்கள் உதவியோடு கடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 706 பேரை மீட்டெடுத் தார். அவர்களுடைய ஜீவனை அழிவுக்குத் தப்புவித்தான்.

**நம் முன் வைக்கப்படும் கேள்வி:** டைட்டானிக்கு வந்த சூழ்நிலைகள் போல நம்மைச் சுற்றியிருப்பவர் களிடம் நான் பார்த்தபோது - கேட்ட போது, இந்த 3 தலைவர்களால், எந்த தலைவனாக இருந்தேன் அல்லது இனிமேலாவது இருப்பேன் என்று சொல்ல முடியுமா? கப்பார்த்திய கப்பலின் தலைவன் ஆர்தர் ஹென்ரி ரோஸ்ட்ரன் (Arthur Henry Rostron) போல, நாமும் பிறர் இடுக்கண்களில் உதவ பரிசுத்த ஆவியானவர் தாமே நமக்குத் துணைபுரிவாராக!

முதல் இரண்டு கப்பல்களின் தலை வர்களும், மூழ்கிக் கொண்டிருந்த டைட்டானிக் கப்பலுக்கு உதவமுடியாது என்று பல காரணங்கள் கற்பித்துக் கொண்டிருந்தனர். 3-ம் கப்பல் தலைவன் மட்டும், சாத்தியக் கூறு களை சிந்தித்து, செயல்படுகிறான். அவர்கள், நாம் என்ன செய்யமுடியும். நம்முடைய பாதுகாப்பே நமக்கு முக்கியம் என்றிருந்தபோது, 3-ம் கப்பல் தலைவன் மட்டும் (God will make a way) கடவுள் ஒரு வழி காட்டுவார் என்று கருதுகிறான். மற்ற வர்கள் அதை ஒரு தொந்தரவாக நினைத்தபோது இவன் மட்டும் அதை உதவும் வாய்ப்பாக பார்க்கிறான். ஆம், ஆர்தர் ஹென்றி ரோஸ்ட்றான், நமக்கு எத்துணை பெரிய முன்மாதிரி? இடுக் கண்களில் இருக்கும் மற்றவருக்கு உதவ விரும்பும் போது, வரும் தடை களை மேற்கொள்ள உதவும் சில சிந்தனைகள்:

1. பிறரால் கைவிடப்பட்டவர்களுக்கு நான்தான் சரியாக உதவ முடியும் என்று கடவுள் நம்மை அழைக்கிறார். அழைப்பவர் துணை நிற்பார்.

2. வேறு யாருமே உதவாத நிலை யில் தமது அன்பையையும் கிருபை யையும் ஒருவனுக்கு வெளிப்படுத்த என்னை வழியாக, பயன்படுத்த விரும்புகிறார்.

ஒருவேளை இக்காரணங்களால் தான், நாம் செல்லும் ஆபத்து நிறைந்த சாலையில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் செல்ல நம்மை அழைக்கிறார் என்பதுவே விசுவாசிகளின் அனுபவம். நாம் வாழ்கிற வாழ்க்கையை வைத்தே நாம் நியாயம் தீர்க்கப்படுவோம் என்பதை நினைவில் கொண்டு வாழ்வது ஆண்டவருக்குப் பிரியம்.

''எனக்குப் பிறன் யார்'' என்ற கேள்விக்கு நமது ஆண்டவர் கொடுத்த பதிலில் 3 கருத்துக்கள் அடங்கியுள்ளதைக் காண்கிறோம்.

1. அடிப்பட்டுக் கிடந்தவன் போல தனது தவறினால், பாதிக்கப்பட்டவனுக்குக் கூட உதவ வேண்டும்.

2. பாதிக்கப்பட்டவன் எந்த நாட்டை, எந்த இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தாலும் உதவ வேண்டும். அந்த உதவி தேவ அன்பைப் போல பரந்து காணப்படவேண்டும்.

3. நாம் செய்யும் உதவி வார்த்தைகளில் மாத்திரமல்ல, செயல்களில் வெளிப்பட வேண்டும்.

லூக்.10:36-37ன் படி இந்த 3 பேரில் **''எவன் பிறனாயிருந்தான்''** என்று ஆண்டவர் கேட்ட போது, நியாயசாஸ்திரி பதிலாக **அவனுக்கு இரக்கம் செய்தவனே** என்று பதிலுரைத்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி, **''நீயும் போய் அப்படியே செய்''** என்றார். **''நீயும் போய் அப்படியே செய்''** - ஆம் இதுதான் நமது பரம எஜமான் நமக்குக் கொடுக்கும் கட்டளை. நாமும் போய் அப்படியே தேவைப்படுகிறவர்களுக்கு இரக்கம் செய்வோம். நமது ஆண்டவர் தாமே இதற்கான கிருபையைத் தருவாராக. ஆமென்!

**- Dr. J. Johnson Sundararaj, Ph.D.**

Former Vice-Principal,
American college,
Mo: 9843680054

## மர உச்சிக்கு தவளை எப்படி ஏறியது?

தவளை ஒன்று மரத்தின் உச்சிக்கு ஏறுவதற்குப் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தது. மற்ற தவளைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ''மரத்தின் உச்சிக்கு ஏற முடியாது'', ''ஏறவே முடியாது'' என்ற உரத்த குரலில் கத்தின. இவ்வளவு ஒருமித்த குரலுக்கும் மத்தியில் அந்தத் தவளை தனது முயற்சியை விட்டுவிடாமல் தொடர்ந்தது. உச்சியையும் எட்டிவிட்டது.

எப்படி அது மரத்தின் உச்சியை எட்டியது? **அதற்கு முற்றுமாகக் காது கேட்காது.** தவளைகள் ஒருமித்து கத்துவதை உடல்மொழியை (Body Language) வைத்துப் பார்த்ததில் தன்னை மரத்தின் உச்சியை எட்டுவதற்கு உற்சாகப் படுத்துவதாகப் புரிந்து கொண்டது. உங்களுடைய இலக்கைச் சென்றடைய வேண்டுமென்பது உங்களது ஒரே குறிக்கோளாக இருக்குமானால் எதிர்மறை குரல்களுக்கும், எண்ணங்களுக்கும் (Negative voice and thoughts) நீங்கள் செவிடராயிவிடுங்கள்.

**சிந்தனைக்கு...**

**''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' [பிலி.2:5]**

மார்ச் 8ம் நாள்

## சர்வதேச மகளிர் தினம் - இந்தியாவின் பங்களிப்பு

தாம்சன் ரெயிட்டர்ஸ் ஃபவுண்டேஷன் என்ற அமைப்பின் 2018ம் ஆண்டு சர்வே அறிக்கையின்படி இந்தியா, பெண்களுக்கு மிகவும் ஆபத்தான நாடு என தரம் பிரித்துக் காட்டுகிறது (A Survey by Thomson Reuters Foundation in 2018 had rated India as the most dangerous country for women).

நமது நாட்டிலுள்ள தேசிய குற்றப் பதிவுகளின் காப்பகத்தின் (National Crime Records Bureau) 2019ம் ஆண்டுக்கான அறிக்கையில் 2019-ம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 32,032 கற்பழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த தகவலின்படி ஒரு நாளைக்கு 88 கற்பழிப்பு, ஒரு மணிக்கு 39 பாலியல் வன்முறைச் சம்பவங்களும் நடந்துள்ளதாக பதிவாகியுள்ளன. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புள்ள நிலவரத்தை வைத்துப்பார்த்தால் 88 விழுக்காடு கற்பழிப்பு வழக்குப் பதிவுகள் கூடியுள்ளன. இது தவிர பெண்களுக்கு இழைக் கப்பட்ட அநீதிகள் தொடர்பாக 4 இலட்சம் வழக்குகள் 2019ல் மட்டும் பதிவாகி யுள்ளன. நன்றி: The Hindu 10.3.21

**சிந்தனைக்கு...**

இந்த பண்பாட்டு சீரழிவுக்கு **(Cultural Degeneration)** என்ன காரணம்? நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்? நம்முடைய தேசம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? இயேசு கிறிஸ்து சொன்ன நோவாவின் காலத்திற்கு, லோத்தின் காலத்திற்கு நெருங்கி கொண்டிருக்கிறோமா? எச்சரிக்கையடை வோம். "பூமியின் எல்லை எங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" (ஏசா.45:22). சகல மக்களுக்கும் ஆண்டவர் ஒரு அழைப்பைக்கொடுக்கிறார் (It is an universal call). ஏனெனில் அவர் உலக இரட்சகர் (Saviour of the World), இரட்சிப்பை அருளுவேன் என வாக்களித் தவர் (Promise), இரட்சிப்பை அருளுவார். அவரையே நோக்கிப் பார்ப்போம். ●



**பிதாவே, இவர்களை மன்னியும்**

"என் கணவரையும் என் பிள்ளைகள் தீமோத்தேயு, பிலிப் ஆகியோரையும் கொன்றவர்கள் மீது எனக்கு கோபமில்லை, ஏனெனில் என் கணவரையும் பிள்ளைகளையும் ஆண்டவர் அவரிடம் அழைத்துக்கொண்டார். இயேசுவுக்காக பாடுகளை ஏற்று ஜீவனைக் கொடுக்க அவர்களை அனுமதித்தபடியால் நான் ஆண்ட வருக்கு நன்றியுள்ளவளாக இருக்கிறேன். **"பிதாவே, அவர்களை மன்னியும், ஏனெனில் அவர்கள் செய்தது இன்னது என்று அறியாதிருக் கிறார்கள்"** என்று அவர்களுக்காக ஜெபிக்கிறேன்".

உயிரோடு எரிக்கப்பட்ட அருட்பணியாளர் கிரகாம் ஸ்டேன்ஸ் அவர்களின் மனைவி கிளாடிஸ் ஸ்டேன்ஸ் அவர்கள் கூறியது.

- **"Burnt Alive"** என்ற புத்தகத்திலிருந்து ●

# விசுவாச வீராங்கனை அன்னாள்

**(Hannah, the heroine of faith)** - பாஸ்டர். ஜுப்ளின் ஜோசப்

எப்பிராயீம் மலைதேசத்தில் எல்க்கானா என்ற ஒரு மனிதன் இருந்தான். அவன் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றும் 1 நாளா.6:33-38, எண்.16:1-4ல் சொல்லப்பட்டிருக்கும் வம்சவழித் தகவலின்படி, எல்க்கானா கோராகின் வம்சத்தைச் சேர்ந்தவன் என்றும் விளங்கிக் கொள்ளுகிறோம். கோராகிலிருந்து எல்க்கானா 16வது சந்ததியினன். அப்படியானால் ஏன் எல்க்கானா லேவிக்கு நியமிக்கப்பட்ட ஆசரிப்பு கூடாரத்தில் ஆசாரியப் பணியைச் செய்யாமல் மற்றவர்களைப்போல ஆண்டுக்கு ஒருமுறை மாத்திரம் குடும்பத்தோடு சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குச் சென்று பலி செலுத்தி தொழுது கொண்டு திரும்புகிறான் என்ற ஒரு கேள்வி எழுகிறது. ஏன் எல்க்கானா ஆசாரிய ஊழியம் செய்வதில்லை? அதற்குக் காரணமுண்டு.

**மோசே, ஆரோனுக்கு விரோதமான கோராகின் கலகம் (Korah`s rebellion)**

லேவியின் கோத்திரத்தைச் சேர்ந்த கோராகு, ரூபன் வம்சத்திலுள்ள தாத்தான், அபிராம் ஆகியோர் மற்றும் 250 பேரைக்கூடச் சேர்த்துக் கொண்டு மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்தான். அப்படியிருக்க நீங்கள் சபைக்கு மேலாக உங்களை உயர்த்தி நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள் என்றும் (எண்.16:5), எங்கள் மீது ஆளுகை செய்யப் பார்க்கிறீர்கள் என்றும் (வ.13) குற்றஞ்சாட்டி, வேறு விதமாகச் சொன்னால் சமஉரிமைக் குரல் எழுப்பினார்கள். மோசே, நாளை நீங்கள் ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்பாக தூப கலசத்தோடு வாருங்கள். ஆரோனும் அவரோடுள்ளோரும் தூப கலசத்தோடும் வரட்டும் பரிசுத்தவான் யார் என்பதை கர்த்தர் தீர்மானிக்கட்டும் என்றான். அதன்படியே மறுநாள் ஆசரிப்பு கூடாரத்திற்கு முன்பு அவரவர் தங்கள் தங்கள் தூபகலசத்தில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு வந்து நின்றார்கள். கர்த்தர் பேசினார். கூடியிருந்த சபையாரில் கோராகின் கூட்டத்தாரை விட்டு விலகிப் போகச் சொல். நான் அவர்களை அழிக்கப்போகிறேன் என்றார். மோசே முகங்குப்புற விழுந்து "தேவனே, ஒரு மனிதன் பாவஞ்செய்திருக்கச் சபையார் எல்லார் மேலும் கடுங்கோபங்கொள்வீரோ" என்று அவர்களுக்காக பரிந்து பேசினான் (வ.22). ஆனாலும் தேவன் தமது முடிவில் தீர்மானமாக இருக்கிறார் என்பதை அறிந்து சபையாரை விலகிவிட மோசே கட்டளையிட்டான். இதற்குப் பின், கோராகு கூட்டத்தார் நின்றிருந்த நிலம் பிளந்தது. "பூமி தன்

வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக் குரிய எல்லா மனிதரையும், அவர் களுக்கு உண்டான சகல பொருள் களையும் விழுங்கிப்போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டா னவை எல்லாவற்றோடும் உயி ரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள்'' (எண்.16: 32,33). இப்படிப்பட்டதொரு தேவ னுடைய நியாயத்தீர்ப்பு முன்பு நடந் ததே இல்லை. தேவன் தாம் தெரிந்து கொண்ட ஊழியர்களின் ஊழியத்தை உறுதிப்படுத்தினார். இப்படிப்பட்ட ஒரு அழிவு ஏற்பட்டாலும் ''கோராகின் குமாரரோ சாகவில்லை'' (எண்.26:10,11). அப்படியானால் கோராகின் குமாரர் தங்களுடைய தகப்பனுடைய மோசேக்கு விரோத மான போக்கிற்கு உடந்தையாக இல்லாதிருந்தார்கள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுகிறோம். ஆனாலும் இஸ்ரவேல் மக்களின் தீர்மானத்தின்படி கோராகின் வம்சத்தி னருக்கு ஆசாரிய ஊழியம் நிராகரிக் கப்பட்டது. லேவி கோத்திரத்திற்கு அந்த ஊழியம் நியாயப்பிரமாணத் தின்படி நியமிக்கப்பட்டிருந்தாலும் அது நிராகரிக்கப்பட்டது. ஆகவே கோராகின் கூட்டத்தாருக்கு லேவி என்ற அந்தஸ்து இல்லாமற் போய் விட்டது. இது தேவ கட்டளை அல்ல. ஆனாலும் பாரம்பரியமாகத் தொடர்ந்தது. அந்த வம்சத்தில் வந்த வன்தான் எல்க்கானா. கோராகுக்கு எல்க்கானா 16வது சந்ததி எனினும் ஆசாரிய ஊழிய இழப்பின் சாபம் தொடர்ந்தது. இதுதான் எல்க்கானா வின் வம்சப் பின்னணி.

**எல்க்கானாவின் குடும்பம்**

எல்க்கானா அன்னாளைத் திரு மணம் செய்தான். அன்னாள் என் றால் கிருபைபெற்றவள் என்று அர்த் தம். ஆனாலும் அவளுக்குப் பிள்ளை யில்லை. கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தார் (1 சாமு.1:5). யூத சமுதாயத்தில் பிள்ளையில்லா திருப்பது ஒரு சாபமாகவே கருதப் பட்டது. லேவியின் அந்தஸ்து இழப் பின் சாபத்தோடு, பிள்ளையில்லை என்ற சாபமும் சேர்ந்து கொண்டது. யூத சமுதாய முறைமையின்படி மனைவி பிள்ளையில்லாதிருந்தால் மனைவியின் சகோதரியையோ அல்லது நெருங்கின உறவிலுள்ள பெண்ணையோ, குடும்பத்தில் சந்ததி உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் திருமணம் செய்து கொள்ளலாம். ஆகவேதான் எல்க் கானா பெனின்னாளை மணந்து கொண்டான். பெனின்னாள் அன்னா ளின் உடன்பிறந்த சகோதரியா அல்லது நெருங்கிய உறவினரா என்ற தகவல் எதுவுமில்லை. பெனின்னாள் என்றால் விலையேறப் பெற்ற முத்து என்று அர்த்தம். ஆனால் அவளுடைய பேச்சிலும் நடக்கையிலும் அவள் விலையேறப் பெற்ற முத்தாகத் தெரியவில்லை. பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள். ஆகவே பெனின்னாள்

அன்னாளை மிகவும் அற்பமாக நடத்தி அவளை துக்கப்படுத்தி விசனப் படுத்தி வந்தாள். அன்னாள் இதனால் மிகவும் மனமடிவுள்ளவளானாள். ஆனாலும் எல்க்கானா அன்னாளை மிகவும் நேசித்தாள். "அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக் கிறாய்?... பத்து குமாரரைப் பார்க் கிலும் நான் உனக்கு அதிகமல்லவா" என்றெல்லாம் அவளோடு கரிசனை யோடு பேசி அவளை ஆறுதல்படுத்தி வந்தான் (1 சாமு.1:8).

**அன்னாளின் விண்ணப்பம்**

எல்க்கானா தன் குடும்பத்தார் அனைவரோடும் சீலோவிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வழக்கத் தின்படி சென்றிருந்தான். அன்னாள் கர்த்தருடைய ஆலயத்திற்குச் சென் றாள். ஆசாரியனாகிய ஏலி அங்கு ஆலயத்தின் வாசலண்டையிலே ஒரு ஆசனத்தின்மேல் அமர்ந்திருந்தார். அதாவது பரிசுத்த ஸ்தலத்தின் வாச லண்டை ஏலி அமர்ந்திருந்திருக்க வேண்டும். ஆனால் அன்னாள் வெளிபிரகாரத்தில் பரிசுத்த ஸ்தலத் திற்கு வெளியே நின்று ஜெபித்திருக்க வேண்டும். அன்னாள் போய், மனங் கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். "சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமை யைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத் தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலை யின்மேல் சவரகன் கத்தி படுவ தில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1 சாமு.1:11). அன்னாள் ஏறெடுத்த இந்த ஜெபம் வேதத்தில் மிகவும் விசேஷமானது. அதை அறிந்துகொள்வது நல்லது. ஏனெனில் அந்த ஜெபம் ஒரு பெரும் சாதனையைப் படைத்திருக்கிறது. அவள் மனங்கசந்து, அழுது ஜெபித் தாள் என்பது ஒருபகுதி. அடுத்து அவள் ஜெபத்தின் தொடக்கத்தைக் கவனித்துப்பாருங்கள். அது ஒரு விசுவாசச் சாதனை என்று சொல்ல லாம். "சேனைகளின் கர்த்தாவே" என்று கர்த்தரை அழைக்கிறாள். "சேனைகளின்" என்று பன்மையில் சொல்லுகிறாள். ஏன்? எபிரேய மூல மொழியில் (Yehovah Tzevaoh) "யெஹோவா ஜெவாயோ" என்று அர்த்தம். இந்த பெயர் எப்படித் தெரிய வந்தது? **"இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன"** என்று ஆதி.2:1ல் வாசிக் கிறோம். ஆகவே வானத்திற்கென்று ஒரு சேனையும் பூமிக்கொரு சேனையுமாக சிருஷ்டிக்கப்பட்டிருக் கிறது. "யெஹோவா ஜெவாயோ" என்பதின் அர்த்தத்தின் ஆழத்திற்குள் சென்று கவனித்தால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் வானமண்டலத்திலுள்ள அனைத்தும் வானத்தின் சேனைகள். மனுக்குலம் உட்பட சகல ஜீவராசிகள், மரம், செடி, கொடி போன்ற தாவர இனங்கள் அனைத்தும் பூமியின் சேனைகள்.

பூமியின் சேனைகளுக்கு பலுகிப் பெருகும் ஆற்றலுண்டு. வானத்தின் சேனைகளுக்கு பலுகிப்பெருகும் ஆற்றல் இல்லை. **இதிலிருந்து அன்னாள் கர்த்தருடைய வார்த்தையில் உரிமையை ஊன்றி உரிமையோடு ஒரு உரிமை கோரலை (Demand with a claim of right) கர்த்தரிடத்தில் வைக்கிறாள். நான் பூமியின் சேனையைச் சேர்ந்தவள். பூமியின் சேனைக்குப் பலுகிப் பெருகும் ஆற்றலைக் கொடுத்திருக்கிறீர்.** நீர் அந்த ஆற்றலைக் கொடுத்திருப்பதால் என் கர்ப்பத்தை நீர் திறக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை வைக்கிறாள். இது நியாயமான விண்ணப்பம்தான். ஏனெனில் மலடி என்ற நிந்தையைச் சுமந்து கொண்டிருக்கிறாள். பெனின்னாளின் கடுஞ்சொற்களால் துக்கம் நிறைந்தவளாக, மனமடிவை சந்தித்துக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள். அதை நினைந்தருளி கர்ப்பத்தைத் திறக்க மன்றாடுகிறாள். விசுவாசத்தோடு உரிமை பாராட்டுகிற விண்ணப்பம்.

அதோடு நிறுத்திக் கொள்ளாமல் **எனக்கு ஒரு ஆண்பிள்ளையைத் தாரும்** என்ற விண்ணப்பத்தை வைக்கிறாள். ஆண்பிள்ளை வேண்டும் என்ற காரணத்தையும் சேர்த்தே வைக்கிறாள். அதற்கு என்ன காரணம்? நான் அவன் உயிரோடிருக்கும் நாள் முழுவதும் அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்ற அர்ப்பணிப்போடு உமக்கு ஒப்புக் கொடுப்பேன் என்ற பொருத்தனையோடு விண்ணப்பிக்கிறாள். இங்கேதான் அவளுடைய விசுவாசத்தின் தைரியத்தின் உச்சத்தைக் காணமுடிகிறது. என்ன தைரியம்? லேவி கோத்திரத்தில் பிறந்திருந்தாலும் கோராகின் கலகம் காரணமாக ஆசாரிய ஊழியத்தின் அந்த சிலாக்கியத்தை இழந்து 16 தலைமுறைகள் ஆயிற்று. அவளுக்கு பிறக்கும் ஆண் மகனை கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியத்திற்கு எப்படி அனுப்பமுடியும்? ஏற்றுக் கொள்ள மாட்டார்களே. அன்னாளுக்கு அது தெரியும். ஆனாலும் அன்னாள் விசுவாசத்தின் தைரியத்தோடு விண்ணப்பிக்கிறாள். நடந்ததென்ன? அவளுடைய விண்ணப்பத்திற்கு கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஏலியின் வாயிலாகப் பதில் கிடைத்தது. **“சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக”** (1 சாமு.1:17) என்றான். **கர்த்தர் அன்னாளை நினைந்தருளினார்.** அவள் கர்ப்பம் திறந்தது. எல்க்கானா அன்னாளை அறிந்தான். அவள் கர்ப்பவதியானாள். **அன்னாள் கேட்டபடியே ஒரு ஆண்மகனைக் கொடுத்தார்.** நான் கேட்டுப் பெற்றுக் கொண்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள் (வ.20). அன்னாள் எல்க்கானாவிடம் சாமுவேல் பால் மறந்த பின்பு பொருத்தனையின்படி கர்த்தருடைய ஆலயத்

தில் கொண்டு போய் விடுவேன் என்று கேட்டுக்கொண்டாள். எல்க் கானாவும் அதற்கு சம்மதித்தான். யூதப்பெண்களின் வழக்கத் தின்படி 2 அல்லது 3 வயது வரை பால் கொடுப்பார்கள். அப்படியானால் சுமார் 3வயது தாண்டாத நிலையில் சாமுவேலை கர்த்தருடைய ஆலயத் தில் கர்த்தருக்கென்று ஊழியஞ் செய்ய ஏலி என்ற ஆசாரியனிடத்தில் சென்று ஒப்புக் கொடுத்தாள். ஏலி யின் காலத்தில் அவருடைய இரு குமாரர்கள் நிமித்தம் எவ்வளவு பெரிய அக்கிரமங்கள் நடந்து கொண்டிருந்தன என்பதை அவள் அறியாதிருக்க வாய்ப்பில்லை. ஆயினும் தைரியமாக சாமு வேலை பால் மறந்த நிலையில் கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு போய்விட்டாள். சாமுவேல் ஆசாரி யனாகிய ஏலிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தான். இங்கே இரண்டு முக்கியமான காரியங் களை கவனிக்க வேண்டும். கர்த் தருடைய ஆலயத்தில் ஊழியத்தின் நியமனத்தின்படி 30வயது நிரம்பிய வர்களே ஆலய ஊழியத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்தப் பிரமாணமெல்லாம் அவள் அறியாத தல்ல. ஆனால் கர்த்தர் வாக்கு மாறாதவர். அவர் பார்த்துக் கொள்வார் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது. ஆனால் மூன் றாவது வயதில் ஆலயத்தின் ஊழி யத்திற்கு கர்த்தருடைய ஆலயம் தொடங்கிய கால முதலிருந்த பிர மாணம், அன்னாளின் விசுவாச முள்ள உரிமைகோரலின் ஜெபத்தால் உடைக்கப்பட்டது. சாமுவேல் ஏற்றுக் கொள்ளப்பட்டான். இரண்டாவதாக லேவி கோத்திரனாக இருந்தாலும் கோராகின் வம்சத்தினருக்கு ஆசாரிய ஊழியம் மறுக்கப்பட்ட நியதி இருந்தும் 16வது தலைமுறையினான எல்க் கானாவின் மகன் சாமுவேலுக்கு அந்த நியதியும் உடைக்கப்பட்டு லேவி கோத் திரத்தை சேர்ந்த சாமுவேலுக்கு 16வது தலைமுறை தாண்டி ஆசாரிய ஊழி யம் கிடைக்க வழிசெய்தது. அன்னாள் ஏன் ஆண்பிள்ளையைக் கேட்டாள் என்பது இப்போது நமக்கு விளங்கு கிறதல்லவா? லேவி கோத்திரத்திலுள்ள கோராகு வம்சத்தினருக்கு இருந்த சாபம் உடைக்கப்பட்டது. அன்னாள் அந்த சாதனையைச் செய்து முடித் தாள்.

சாமுவேலை ஊழியத்திற்கு பிரதி ஷ்டை செய்த நாளில் அவள் கர்த் தருக்குள் மகிழ்ந்து பாடியதை 1சாமு.2ம் அதிகாரத்தில் வாசிக்கி றோம். அவளுடைய துக்கம் சந்தோ ஷமாக மாறிற்று. ‘‘கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை. உம்மை யல்லாமல் வேறொருவரும் இல்லை. எங்கள் தேவனைப்போல ஒரு கன் மலையும் இல்லை. இனி மேட்டிமை யான பேச்சைப் பேசாதிருங்கள்; அகந் தையான பேச்சு உங்கள் வாயி லிருந்து புறப்படவேண்டாம்; கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய் கைகள் யதார்த்தமல்லவோ? என்று தொடர்ந்து பாடுகிறதைக் காண்கிறோம் (1 சாமு.2:2,3).

நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய மற்றுமொரு காரிய

முண்டு. சாமுவேல் கர்த்தருக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான். ஒருநாள் சாமுவேல் அவனுடைய ஸ்தானத்திலே விளக்குகள் அணைந்து போவதற்கு முன்பு போய் படுத்துக் கொண்டிருந்தபோது (அதாவது பிரகாரத்தில்) கர்த்தர் அவனை ''சாமுவேலே'' என்று கூப்பிட்டார். அவன் அறியாதவனாக பரிசுத்தஸ்தலத்தில் படுத்திருந்த ஏலியினிடத்தில் சென்று ''இதோ இருக்கிறேன், என்னைக் கூப்பிட்டீரே என்றான்''. அவர் ''நீ போய் படுத்துக் கொள். நான் கூப்பிடவில்லை'' என்றான். அதுபோல இரண்டாம் முறையும் கர்த்தர் கூப்பிட்டார். சாமுவேல் முன்பு போலவே எழுந்து வந்து ஏலியினிடத்தில் வந்தான். இப்போது கர்த்தர் அவனைக் கூப்பிடுகிறார் என்று ஏலி உணர்ந்து இனி கூப்பிட்டால் ''கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்று சொல் என்று சொல்லி அனுப்பினார். அது போலவே கர்த்தர் மூன்றாம் முறை சாமுவேலைக் கூப்பிட்டார். ''சொல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்று சொல்லி இப்பொழுது சாமுவேல் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறான். கர்த்தர் சாமுவேலிடம் அவன் சிறியவனாக இருந்தும் அவனோடு பேசினார். ஏலியின் குடும்பத்திற்குச் செய்யப்போகிறதைக் குறித்து பேசினார். சாமுவேல் விடியற்காலை மட்டும் படுத்திருந்து கர்த்தருடைய ஆலயக் கதவுகளைத் திறந்தான் என்றால் (வ.15) அவன் அதுவரை மகா பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளே இருந்து வெளியே வந்ததாக நாம் விளங்கிக் கொள்ளுகிறோம்.

நிராகரிக்கப்பட்ட கோராகு வம்சத்தில் வந்த லேவியின் கோத்திரம் இப்பொழுது விரோதமாக நின்ற பிரமாணங்களையெல்லாம் உடைத்து வெளிப்பிரகாரத்தில் அல்ல, பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டது. அன்னாளின் மகாபரிசுத்த விசுவாசம் அதைப் பெற்றுத் தந்தது. ''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்'' என்பது எவ்வளவு பெரிய உண்மை(1யோவா.5:4). அன்னாளின் விடாப்பிடியான ஜெபம் (Prayer of Perseverance) லேவி கோத்திரத்தில் பெரும் சாதனையைப் படைத்தது. கர்த்தர் அன்னாளின் விசுவாசத்தைக் கனப்படுத்தியதின் காரணமாக அது சாத்தியமாயிற்று. பிள்ளையில்லாத மலடி ஆண்பிள்ளையைப் பெற்றாள். பொருத்தனையின்படி அந்த ஆண் பிள்ளையை கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புவித்தாள். சாமுவேலை, ஆசாரியனாக, பிரதான ஆசாரியனாக, நியாயாதிபதியாக, இராஜாக்களை நியமிக்கிறவனாக (King Maker) ஆக உயர்த்தினார். உண்மையிலேயே அன்னாள் ஒரு விசுவாச வீராங்கனைதான்.

**21.2.21ல் நடந்த காவல்துறை குடும்ப ஜெப ஐக்கியக் கூடுகையில் பாஸ்டர். ஜுப்ளின் ஜோசப் அவர்கள் அளித்த தேவ செய்தியைக் கேட்டு தொகுத்தளித்தவர் தொகுப்பாசிரியர்.** ●

# ஜார்ஜ் வாஷிங்டனின் தீர்க்கதரிசன எச்சரிக்கை நிறைவேறுகிறதோ!

230 ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய அமெரிக்க தேசம் உருவாக்கப்பட்டு, முதல் அமெரிக்க ஜனாதிபதியாக ஜார்ஜ் வாஷிங்டன் பொறுப்பேற்ற நேரம். மகிழ்ச்சி ஆரவாரத்தோடு, பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். அமெரிக்காவின் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையின் பெருமிதத்தோடும், ஜனாதிபதி என்ன பேசப் போகிறார் என்ற எதிர்பார்ப்போடும் மக்கள் கூடியிருந்தனர். ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் புதிதாய் பிறந்த தேசத்தின் (New Born Nation) மக்களுக்குத் தன்னுடைய முதல் உரையை ஆரம்பித்தார். அந்த உரை ஒரு தீர்க்கதரிசன எச்சரிக்கையாகவே (Prophetic Warning) அமைந்தது.

‘‘பரலோகம் நியமித்திருக்கும் நித்தியமான கட்டளைகளையும் பிரமாணங்களையும் நமக்களிக்கப்பட்டிருக்கும் உரிமைகளையும் நாம் மதிக்காமல் அலட்சியம் செய்வோமானால் பரலோகத்தின் மனநிறைவான புன்னகை நம் தேசத்தில் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. வேறுவிதமாகச் சொன்னால் அமெரிக்க தேசம் தேவனுடைய வழிகளையும், அவருடைய நித்திய கட்டளைகளையும் பிரமாணங்களையும், அவர் அளித்த உரிமைகளையும் தவறாமல் பின்பற்றுமானால் (Heavenly or Divine Law) ஆண்டவருடைய நிறைவான ஆசீர்வாதம் எப்பொழுதும் தங்கியிருக்கும். **அமெரிக்க தேசம் அதைச் காத்துக்கொள்ளத் தவறினால் அனைத்து ஆசீர்வாதங்களும் நீக்கப்படும்**’’. இதுதான் அன்று ஜார்ஜ் வாஷிங்டன் கூறிய எச்சரிக்கை! ஆனால் இரண்டு நூற்றாண்டுகளைத் தாண்டிவந்தபின் இன்றைய நிலை என்ன?

2021 ஜனவரி 20ம் நாள் 46வது புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் அமெரிக்காவின் தலைநகரில் பொறுப்பேற்றார். என்ன நடந்தது? அமெரிக்க வரலாற்றிலேயே பொது மக்கள் யாரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாத ஜனாதிபதி பொறுப்பேற்கும் நிகழ்வின் முதல் நிகழ்ச்சி இதுதான். மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் மக்கள் கூட்டத்திற்குப் பதிலாக 25,000 அமெரிக்க இராணுவம் சூழ, மற்றவர்கள் அந்த இடத்தை அணுகாமலிருக்க ஆங்காங்கே மின் கம்பி சுருள்கள் (Barbed Wire) அமைக்கப்பட்டிருந்தன. யுத்தம் எதுவும் நடக்கவில்லை. வெளிநாட்டிலிருந்து எல்லைதாண்டி இராணுவம் வந்து தாக்கிவிடுமோ என்ற அச்சமில்லை. கொரோனா தொற்றுக்குப் பயந்து கதவு, ஜன்னல்களை அடைத்து மக்கள் வீட்டிலே இருந்துவிட்டனரா? அப்படியும் இல்லை. ஆனால் தலைநகர் முழுவதும் சொந்த மக்களே பதவிப் பிரமான நிகழ்ச்சிக்கு விரோதமாக கலகம், தீ வைப்பு போன்ற கொடிய வன்முறையில் இறங்கினார்கள். இவற்றால் பீதியையும் பேரச்சத்தையும் கொடுத்துக் கொண்டு இருந்தது. எங்கும் வன்முறை தலைவிரித்தாடியது. தேசிய தலைவர்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடி மறைந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் தீர்க்கதரிசன எச்சரிக்கை நிறைவேறுகிறதா, அமெரிக்க தேசத்திலிருந்த பரலோகத்தின் புன்னகை (Smiles of Heaven) நீங்கிப் போய்விட்டதா? அப்படியானால் பரலோக சட்டதிட்டங்களை அசட்டை செய்துவிட்டு அமெரிக்கா தன்போக்கில் விலகிச் சென்றுவிட்டதா? **வளமை வாழ்வும் செழிப்பும் வந்தவுடன் அவற்றை அருளிய ஆண்டவரை மறந்து செழிப்பில் கண்களைப் பதித்து ஆண்டவரை விட்டு வெகு தூரத்திற்கு விலகிச் சென்றுவிட்டது என்பதுதான் உண்மை. அவருடைய வழிகளை நிராகரித்து விலகிச் சென்றது மாத்திரமல்ல ஒழுக்கக் கேடான வழிகளைத்** (Ways of Immorality) **தெரிந்து கொண்டோம்**. தீமையானதை நன்மையானது என்றும், நன்மையானதை தீமையானது என்றும் சொல்லக் கற்றுக் கொண்டோம். நம்முடைய குழந்தைகளை நாமே கொன்ற இரத்தக்கறை நம்மைவிட்டு நீங்கவில்லை. எப்படி என்று கேட்கிறீர்களா? தாயின் வயிற்றில் உருவாகி வளர்ந்த சிசுவை அது பிறவாததற்கு முன்னே (Unborn Children) இலட்சக்கணக்கான சிசுக்களை கொல்லவில்லையா? அச்சிசுக்களின் அழுகுரல்கள் பரலோகத்திற்கு எட்டியிருக்காதா? இது போதாதென்று கருச்சிதைவை எளிதாக்க சட்டத்திருத்தங்கள் கொண்டுவர திட்டமிடுகிறீர்கள். நாம் ஆண்டவரை விட்டு விலகியது மாத்திரமல்ல நம்முடைய பிள்ளைகளையும் மூளைச்சலவை செய்து அவர்களையும் விலகச் செய்துவிட்டோம். **பள்ளிகளில் ஜெபத்தோடு ஆரம்பித்த முறைமைகளையெல்லாம் விட்டு, நாம் கற்றுக் கொடுத்த ஒழுக்க நெறிகளையும் நிறுத்திவிட்டு, ஆண்டவருடைய வார்த்தையை விட்டு விலகச் செய்துவிட்டோம்.**

பூர்வ நாட்களில் இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை விட்டு விலகித் தூரம்போன வேளைகளிலெல்லாம் தேசத்தை சத்துருக்களின் தாக்குதல்களுக்கு ஒப்புக் கொடுத்தார் என்று வேதம் சொல்லுகிறது. 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் நாள் எதிரிகளால் விமானத்தைக் கொண்டு வர்த்தக மையம் இரட்டைக் கோபுரம் கொடூரமாகத் தாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப் பட்டார்களே; நாம் உணர்வடையவில்லையே. இப்போது 19 ஆண்டுகள் கழித்து தேசம் மிகப்பெரிய நெருக்கத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் சந்தித்தும் நாம் இன்னும் ஆண்டவர் பக்கம் திரும்பத் தவறிக் கொண்டிருக்கிறோம்.

மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்களே, இப்போது தேசத்தின் ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்கும் குரல் எழுப்புகிறீர்கள். **ஆண்டவரை விட்டு விலகிச் சென்ற தேசத்தில் எப்படி ஐக்கியத்தையும் சமாதானத்தையும் எதிர்பார்க்க முடியும்?** ஆண்டவரை அஸ்திபாரமாகக் கொண்ட ஒரு தேசம் அஸ்திபாரத்தை விட்டு விலகிச் செல்லுமானால் அங்கு ஐக்கியமும் சமாதானமும் இருக்க முடியாது. **நமக்கு தேவனோடு ஐக்கியமும் சமாதானமும் இல்லாதிருக்கும்**

**போது தேசத்தில் எப்படி ஐக்கியமும் சமாதானமும் இருக்கும்?** நமக்கு நாமே பிரிந்திருக்கும் வீடாக மாறிவிட்டோம் (A house divided against itself). பிரிந்திருக்கும் வீடு எப்படி நிலைநிற்கும்? இயேசுவை பின்பற்றுகிறவன் என்று சொல்லிக் கொண்டு இடது கையை சத்திய வேதமாகிய வேதாகமத்தில் வைத்து சத்திய பிரமாணம் எடுத்துக் கொண்டு வலது கையால் பரலோகச் சட்டத்திற்கு விரோதமான சட்டங்களைக் கொண்டுவர செயல்படத் தொடங்கி யிருக்கிறீர்கள். **மரணமும், ஜீவனும், பரிசுத்தமும் பாவமும், நீதியும் ஒழுக்கக்கேடும், நன்மையும் தீமையும் எப்படி ஒரே இடத்தில் இருக்க முடியும்?** உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்களைப் பாராட்டலாம், கைதட்ட லாம். ஆனால் அவைகளெல்லாம் ஒருநாள் மங்கிப் போகும். இந்த உலகத் தைவிட்டுக் கடந்து போகும் காலம் வரும். உங்களது அனைத்து செயல்களும் நீங்கள் ஆண்டவருக்கு முன்பாக நின்று கணக்கு ஒப்புவிக்கும் நாள் வரும். அப்பொழுது உங்களது அதிகாரமெல்லாம் அங்கு செல்லுபடியாகாது. **வரலாற்று புத்தகம் மூடப்படும். ஜீவபுத்தகம், திறக்கப்படும்.** இது உங் களுக்குத் தெரியாதா? வரலாற்றில் உங்கள் பெயர் மேன்மையான இடத்தைப் பெறலாம். ஆனால் ஜீவபுத்தகத்தில் பெயர் இடம் பெறாவிட்டால் எங்கு செல்லவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?

அமெரிக்கா சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனை, சமூக, பொருளாதார கலாச்சார, அரசியல் பிரச்சனையல்ல. அது ஆவிக்குரிய பிரச்சனை (Spiritual Problem). அதற்கான பதிலைத் தேடியாக வேண்டும். மனந்திரும்பி கர்த்தரி டத்தில் திரும்புங்கள். இல்லாவிட்டால் நித்திய ஆக்கினியை அடைவீர்கள். இந்த தேசத்தை உண்மையாய் நேசிப்பவர்கள், தேசத்தின் எதிர்காலத்தைக் குறித்து பாரம் உள்ளவர்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு முழங்கால்படியிட்டு ஆண்டவரை நோக்கி ஜெபம்பண்ணி தேசத்தை ஒரு எழுப்புதலுக்கு நேராக வழிநடத்த முன்வராவிட்டால் இந்த தேசம் தொலைந்து போய்விடும். மக்கள் கர்த்தரிடத்தில் திரும்பட்டும். **மதச் சுதந்திரம் (Religious freedom)என்ற பெயரில் அந்நிய தெய்வங்களை உட்பிரவேசிக்க அனுமதித்துவிட்டோம்.** விழிப்படைய வேண்டிய காலம். "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக் கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்" என்று (2 நாளா.16:9)ல் வேதம் சொல்லுகிறது. இனியும் அசட்டை செய்யாதிருப்போம். "இதோ இருள் பூமியையும், காரிருள் ஜனங் களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்" என்று ஏசாயா தீர்க்கதரிசி உரைக்கிறார்(ஏசா.60:2). அவரது வெளிச்சத்தைக் கொண்டு நாம் இருளைக் கடந்து செல்ல முடியும், வழியும் சத்தியமும் ஜீவனுமான

இயேசுவை நோக்கிப் பார்ப்போம். அவர் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். நாம் கர்த்தரோடிருந்தால் அவர் நம்மோடிருப்பார். நாம் அவரைத் தேடினால் நமக்கு வெளிப்படுவார். ஆமென்.

"புதிய ஜனாதிபதி ஜோ பைடனுக்கான தீர்க்கதரிசனச் செய்தி" (Prophetic message ot Joe Biden) என்ற தலைப்பில் பாஸ்டர் ஜோனத்தான் கான் (Jonathan Cahn) அவரது ஆலயத்திலிருந்து அளித்த இந்த செய்தி ஜனாதிபதி பொறுப்பேற்ற அன்று மாலையிலே யு டியுப் சேனல் மூலம் அளிக்கப் பட்டதாகும். அன்றைய தினத்தில் மட்டுமே 1.3 மில்லியன் மக்கள் இச்செய்தியைக் கேட்டுள்ளனர். இச்செய்தி மக்களிடையே சர்ச்சையை உண்டாக்கினாலும் இன்றும் அச்செய்தி பரவிக்கொண்டுதான் இருக்கிறது. ஒரு தேசம் கர்த்தருடைய தெய்வீகச் சட்டங்களுக்கு (Divine Law) விரோதமாக நாட்டின் சட்டங்கள் அமுலாக்கப்படும்போது (Law of the land) கர்த்தர் கவனித்துப் பார்க்கிறார். அந்த தேசம் அவரது கோபத்திற்கு ஆளாகிறது. ஆனாலும் நமது வழிகளைச் சீர்ப்படுத்தி அவரை நோக்கிப் பார்க்கும்போது அவர் இரங்குகிற தெய்வமாக இருக்கிறார். இச்செய்தி அமெரிக்காவிற்கு மாத்திர மல்ல ஆண்டவரை விட்டு விலகிச் செல்லும் எல்லா தேசத்திற்கும் பொருத்த மானதே என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ●

- நன்றி: தகவல் www.theamericanconservative.com
Jonathan-cahn-big-tech-vs-Christians.

---

**- 12ம் பக்கத் தொடர்ச்சி....**

எந்த நிமிடமும் கவிழும் நிலையற்ற அரசுகளாக இருக்கும். அப்பொழுது தான் தேவன் என்றென்றும் அழியாத இராஜ்ஜியத்தை நிறுவுவார். அதைத் தான் மேலே தானி.2:44-ல் காண்கிறோம். அதுதான் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் இராஜ்ஜியம். அதற்கான அறிகுறிகளை இப்போது அநேக நாடுகளில் காண முடிகிறது. உலக இராஜ்ஜியங்களுக்கு அந்த நிகழ்வு பெரிய நியாயத்தீர்ப்பாக மாறும். அழிவில்லாத நித்திய இராஜ்யம் எழும்பும். அந்த நித்திய இராஜ்ஜியத்தின் ஆளுகையில் இயேசு கிறிஸ்துவுடையவர்கள் (They that are christ), அவரோடு சேர்ந்து ஆளுகை செய்வார்கள் என்று வேதம் சொல்லுகிறது. "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" என்று வெளி.3:21ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாக்களித்திருக்கிறார். வாக்களித்தவர் மாறாதவர். அது அப்படியே ஆகும். **"ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும் படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்"** (எபி.12:28). ●

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

**- பாகம் 17**

கிறிஸ்தியான், தன்நம்பிக்கையின் (Hopeful) சாட்சியைக் கேட்டு பெரும் மகிழ்ச்சியால் உணர்ச்சிக்குள்ளானான். அவர்கள் இருவரும் தங்கள் பயணத்தில் முன்னேறிக் கொண்டிருந்தனர். அப்பொழுது தன்நம்பிக்கை திரும்பிப் பார்த்த போது அறிவிலி (Ignorance) பின் தங்கினவனாக வந்து கொண்டிருந்தான். தன்நம்பிக்கை அவனைக் குறித்து மிகவும் பரிதவித்தான். ஆகவே கிறிஸ்தியானும், தன்நம்பிக்கையும் அறிவிலியும் தங்களோடு வந்து சேர்ந்து கொள்ளட்டுமே என்று சற்று தாமதித்தார்கள். அறிவிலியும் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான். அப்பொழுது கிறிஸ்தியான் அறிவிலியிடம் "உனக்கு இரட்சிப்பின் நிச்சயம் இருக்கிறதா?" என்று கேட்டான். அதற்கு அறிவிலி "என் இருதயம் இரட்சிப்பைக் குறித்த எண்ணங்களால் நிறைந்திருக்கிறது என்று நிச்சயமிருக்கிறது" என்று பதிலளித்தான். அதற்கு கிறிஸ்தியான் "இரட்சிப்பு என்பது இருதயம் இரட்சிப்பைக் குறித்த எண்ணங்களால் நிறைந்திருப்பது அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்து நமக்காகச் சிலுவையில் செய்து முடித்ததை மையமாகக் கொண்ட வாழ்வும் அதற்கு தேவனுடைய வார்த்தை நம்மில் சாட்சியாக இருப்பதுமே இரட்சிப்பு" என்பதை தெளிவு படுத்தினான்.

அறிவிலி அவனுடைய நிலையை விவரிக்க ஆரம்பித்தான். "பாவிகளுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை நான் விசுவாசிப்பதால் அந்த விசுவாசமே என் சாபங்களைத் தீர்த்து என்னை நீதிமானாக்கும். ஏனென்றால் நான் அவருடைய பிரமாணங்களை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியும்போது அவர் அருளும் கிருபையாலும், தகுதியாலும் அது எனக்கு சாத்தியமாகும்" என்று வியாக்கியானம் செய்தான். அறிவிலியின் பதிலைக்கேட்டு கிறிஸ்தியானும், தன்நம்பிக்கையும் மிகவும் அதிர்ச்சியடைந்தனர்.

கிறிஸ்தியான் மிக அழுத்தமாக அறிவிலியிடம் "உன்னுடைய மேன்மையான தகுதிகளால் (Merits) பரலோகத்தின் வழி உனக்குத் திறக்கப்படாது. நிச்சயமாக இயேசு கிறிஸ்துவுக்கும் பிதாவாகிய ஆண்டவருக்கும் அது ஏற்புடையதாக இருக்காது. நிச்சயமாக இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த தியாகமும் தன் பரிசுத்தமுமான பலியினால் அவர் நமக்கு சம்பாதித்துத் தந்ததாகும். அது அல்லாமல் ஒருவனுடைய மேன்மையான தகுதிகளால் மாத்திரம் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. ஆனால் அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அருளும் கிருபையால் சாத்தியமாகும்". கிறிஸ்தியான் சொன்ன காரியங்கள் எதுவும் அறிவிலிக்குப் பிடிக்கவில்லை. அடுத்து தன்நம்பிக்கை "இயேசு

கிறிஸ்துவின் மூலமாக பிதாவாகிய ஆண்டவருடைய வெளிப்படுத்தல்களை நீ பெற்றிருக்கிறாயா?" என்று கேட்டான். அதற்கு அறிவிலி "சிந்தனையாளர்கள் யாரும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அது சிந்தனையின் சிதறுதலால் (Distracted brain) ஏற்படும் விளைவுகள் தான்" என்றான்.

தன்நம்பிக்கை, இயேசு கிறிஸ்துவை பிதாவானவர் வெளிப்படுத்திக் கொடுத்தாலொழிய யாரும் இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்ள முடியாது" என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொன்னான். அதற்கு அறிவிலி "அது அல்ல என்னுடைய விசுவாசம். இதெல்லாம் சிந்தனையில் எழும்பும் கற்பனைகள்" என்றான்.

அறிவிலி, தன்னுடைய கருத்தில் மிகவும் பிடிவாதமாக இருக்கிறான் என்பதையும் இயேசுகிறிஸ்து அருளும் கிருபையின் இரட்சிப்பை (Saving grace) அறியாதிருக்கிறான் என்பதையும் கிறிஸ்தியானும் தன்நம்பிக்கையும் விளங்கிக் கொண்டு, அறிவிலியை அவன் வழிக்கே விட்டுவிட்டனர். ஏனெனில் சாத்தான் அவனுடைய கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டனர்.

**பியூலா தேசம்**

கிறிஸ்தியானும், தன்நம்பிக்கையும் பயணத்தைத் தொடர்ந்து அவர்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்த வசீகரமான பியூலா தேசத்தை வந்தடைந்தனர். அது பாலும் தேனும் பாயும் தேசம். திராட்சைக் குலைகள் கனத்துத் தொங்கும் தேசம். அது நிறைவின் தேசம். அங்கிருந்து பார்த்தபோது மகிமையான ஒளியாக பிரகாசிக்கும் பொன்னான நகரத்தைக் (Golden city) கண்டார்கள். அவர்கள் நேசம் வைராக்கியத்தால் நிறைந்து ஸ்தம்பித்துப் போயிருந்தது. பின்னர் அந்த மோட்சப் பட்டணத்தை நோக்கி நகர்ந்தார்கள். ஆனால் அந்த பொன்னான நகரத்தைச் சென்றடைய பெருக்கெடுத்து ஓடும் ஒரு நதியைக் கடக்க வேண்டியதிருந்தது. அது மிகவும் ஆழமாக இருந்தபடியால் எப்படி நடப்பது என்ற பயம் கிறிஸ்தியானை ஆட்கொண்டது. ஆனால் தன்நம்பிக்கை மிகுந்த தைரியத்தோடு நதியில் இறங்கி கடக்க ஆரம்பித்தான். இந்த சூழ்நிலையில் ஆண்டவர் அருளிய வாக்குத்தத்தம் அவனுக்கு வந்தது. "நீ நதியைக் கடக்கும் போது அது உன் மேல் புரளுவதில்லை. இது நினைவில் வந்த மாத்திரத்தில் அவன் தைரியமடைந்தான். உற்சாகத்தோடு நதியில் இறங்கினான். இருவரும் நதியைக் கடந்து கரையேறினார்கள். அப்போது மிகவும் பிரகாசமான இருவர் (Two shining ones) வந்து சந்தித்து இருவருக்கும் புதிய ஆடை கொடுத்தனர். ஏனெனில் அவர்கள் ஆடைகளை நதி அடித்துச் சென்றுவிட்டது.

புதிய ஆடையுடன் கிறிஸ்தியானும், தன்நம்பிக்கையும் சீயோன் மலையைச் (Mount zion) சென்றடைந்தனர். தேவதூதர்கள் அவர்களிடத்தில் வந்து தங்கள் ஜீவனைத் தியாகம் செய்த தேவனுடைய பரிசுத்தவான்களை

அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அது மெய்யான அன்பும், தூய்மையான மகிழ்ச்சியும் பாடல்களும் நிறைந்த பட்டணமாக இருந்தது. இப்பொழுது மோட்சப் பட்டணத்தின் வாசலைச் சென்றடைந்தனர். அப்பட்டணத்தின் வீதிகளெல்லாம் பொற்தளமாக இருந்தன. இப்பொழுது அன்பின் இராஜாவைச் சந்திக்கச் செல்லு கின்றனர். இப்பொழுது அவர்கள் ஒளிமயமாகக் காணப்படுகிறார்கள். இப்பொழுது இராஜாதி இராஜாவின் அரண்மனைக்கு அழைத்துச் சென்று இராஜாவின் முன் பாக நிறுத்துகிறார்கள். இராஜாதி இராஜாவாகிய ஆண்டவர் அவர்களை ஏற்றுக் கொண்டார்.

பியூலா தேசம் என்பதைக் குறித்து ஏசாயா 63:4ல் வாசிக்கிறோம். பியூலா என்ற எபிரேயச் சொல்லுக்கு விவாகம் செய்யப்பட்டவள் அல்லது வாழ்க்கைப்பட்டவள் என்று அர்த்தம். “நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன் மேல் இருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்” என்று அப்பகுதியில் வாசிக்கிறோம். எப்சிபா என்றால் “கர்த்தரின் மகிழ்ச்சி அவள் மீது இருக்கிறது” (My delight is in her) என்று அர்த்தம். பியூலா என்ற சொல்லுக்கு வாழ்க்கைப்பட்டவள் (Married) என்றால் யாருக்கு வாழ்க்கைப்பட்டவள்? கர்த்தருக்கு வாழ்க்கைப்பட்டவளாக மாறுகிறாள். வேறுவிதமாகச் சொன்னால் மணவாளன், மணவாட்டி போன்ற மிக நெருங்கிய உறவுக்குள் வருகின்ற (Intimate relationship with God) அனுபவமாக இருக்கிறது. கர்த்தரோடு சதா காலமும் அப்படிப்பட்ட உறவோடு வாழுகின்ற வாழ்க்கை என்று சொல்லலாம். கிறிஸ்தியானும் தன்நம்பிக்கையும் அப்படிப்பட்ட நித்திய அனுவத்தைப் பெற்றுக் கொள்ள உலக சந்தோஷங்களை வெறுத்து, பாடுகளின் வழியைத் தெரிந்து கொண்டு அந்த பியூலா தேசத்தை நோக்கிப் பயணித்தவர்கள், ஆகவே அவர்கள் விரும்பியதைப் பெற்றுக் கொள்ள கர்த்தரின் கரம் அவர்களோடு கூட இருந்தது. நமது ஆழ்ந்த விருப்பமும் அதுவாகவே இருக்க வேண்டும்.

**நாம் கற்றுக் கொள்ள வேண்டி யவை**

அறிவிலியோடுள்ள உரையாடலில் நாம் இரண்டு காரியங்களை கற்றுக் கொள்ள வேண்டும். அறிவிலியைப் போன்ற குணாதிசயங்கள் தான் நம்மைச் சுற்றியுள்ள மக்களிடம் நாம் காண்கிறோம். தற்கால உலகில் அவர்கள் ஞான முள்ள ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் அவர்கள் குணாதி சயங் கள் ஒன்று போல் தான் இருக்கிறது.

இன்றைய கிறிஸ்தவர்கள் கூட நல்ல எண்ணங்கள், நல்ல உயிரோட்டமான செய்திகள் இருந்தால் அதுவே போதும் என்று விசுவாசிக்கிறார்கள். அதுதான் ஆண்டவரைச் சார்ந்து கொள்ளும் பண்பு என்று நம்புகிறார்கள். **மற்றவர்கள் பார்வையில் நல்லவனாக நடந்தாலே போதும் நாம் ஆண்டவரைச் சென்ற டையலாம் என்று எண்ணுகிறார்கள்.** ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் மீட்பிற்காய் சிலுவையில் செய்து முடித்த காரியத்தில் நமது விசு வாசத்தை ஊன்றாவிட்டால் பிதாவைச் சென்றடைய முடியாது என்று வேதம் மிகத் தெளிவாக சொல்லுகிறது. நமது நல்ல எண்ணங்கள், நம்முடைய செயல்பாடுகள் ஆண்டவரின் சிங்காசனத்திற்கு எடுத்துச் செல்லாது. 10ம் பக்க பார்க்க...

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805

WORD OF CHRIST